**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.**

முன்னிலை: திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி.

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் நாள் புதன்கிழமை.

**Crl.M.P.No.98/2025**

**இன்**

**M.C.No.7/2024**

---

S. சஞ்சய் காந்தி ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

–எதிர்–

D. சண்முகஜோதி ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது 14.03.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முருகன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.வெங்கடேசன்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 14.08.2025 ம் தேதியன்று வந்தபோது, இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

1. அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக தேனி மாவட்டம் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் H.M.OP.No.799/2022 என்ற வழக்கில் இ.ம.எண்.9/2024 ல் எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தின் அசல் ஆவணத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல்.

2. **மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில், இம்மனுவின் மனுதாரர் அசல் மனுவில்

எதிர்மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர் மாண்புமிகு மாவட்ட குடும்ப நல நீதிமன்றம் தேனி H.M.OP.No.799/2022 வழக்கினை இம்மனுவின் எதிர்மனுதாரருக்கு எதிராக விவாகரத்து பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவானது அருப்புக்கோட்டை கனம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு H.M.OP.No.183/2024 என புது எண் கொடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் இ.ம.எண்.9/2024 மனுவில் இம்மனுவின் எதிர்மனுதாரர் மாண்புமிகு மாவட்ட குடும்ப நல நீதிமன்றம் தேனி தாக்கல் செய்து எதிருரை மற்றும் வாக்குமூலத்தினை எதிர்மனுதாரரின் முந்தைய வாக்குமூலம் என்ற அடிப்படையில் பிரிவு 149 BSA–ன் கீழ் தேவைப்படுகிறது என்றும், அதனுடைய அசல் ஆவணம் எதிர்மனுதாரரிடம் உள்ளது என்றும், அதை கொண்டு எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தினை முறைப்படுத்த வேண்டும் என்றும், அதனுடைய புகைப்பட நகல்தான் நீதிமன்றத்தில் உள்ளது என்றும் மனுதாரர் கூறியுள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்</u>:–

எதிர்மனுதாரர்/மனுதாரர் தனது எதிருரையில் அசல் எதிருரையே தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்க தனியாக மனு அவசியமில்லை என்றும், எதிர்மனுதாரர் சொல்லும் சங்கதிகள் உண்மையாக இருந்தால் அவரை குறுக்கு விசாரணை செய்யும் போது எதிர்மனுதாரரின் சான்றிட்ட நகலை முறையாக குறியீடு செய்ய முடியும் அல்லது மனுதாரரின் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்ய முடியும். அதனை விடுத்து இந்த மனுவின் மூலமாக எதிர்மனுதாரர் தாக்கல் செய்ய பரிகாரம் கோரியிருப்பது சட்ட முறையாக ஒவ்வாத நடவடிக்கையாகும் என்று கூறியுள்ளார்.

4 மனு, அபிடவிட் மற்றும் எதிர்உரை பரிசீலிக்கப்பட்டது. உபய தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. <u>**தீர்வு முடிவு:–**</u>

7(1). மனு, எதிருரை, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

7(2). மேற்படி வழக்கு கோப்புகளை பரிசீலிக்கையில் இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தேனி மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த H.M.O.P.No.799/2022 என்ற வழக்கின் இடைக்கால மனு எண்.9/2024 ல் இம்மனுவின் எதிர்மனுதாரர் எழுத்து மூலமாக ஒரு உரையை ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சான்றிட்ட நகலினை வழங்கும் போது நீதிமன்றமானது அந்த ஆவணம் புகைப்பட நகலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது **(Copy Prepared from Photo Copy)** என்று தெரிவித்து நகல் வழங்கியுள்ளது. எனவே மேற்படி ஆவணத்தின் அசலினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்று இம்மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ளது. இம்மனுதாரர் தேனி மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த H.M.O.P.No.799/2022 வழக்கானது அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு H.M.O.P.No.183/2024 என எண் வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும், தேனி மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் மேற்படி ஆவணத்தின் நகல் தான் இம்மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது. மனுதாரர் தரப்பில் விசாரணையின் போது அந்த ஆவணம் சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தினை முரண்படுத்துவதற்காக அவசியம் என்று கோரப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், நகல் என்பதால் அதனை இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், மேற்படி ஆவணத்தின் அசலினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதால் எதிர்மனுதாரருக்கு எந்த தீங்கும் ஏற்படாது

என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தேனி மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் H.M.O.P.No.799/2022 என்ற வழக்கில் இ.ம.எண்.9/2024 ல் எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தின் அசல் ஆவணத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

8. <u>இறுதி முடிவு</u> :

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர் இ.ம.எண்.9/2024 in H.M.OP.No.799/2022 வழக்கில் தாக்கல் செய்த உரையின் அசலினை **16.09.2025** ம் தேதிக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

அடுத்த வழக்கெடுப்பு நாள்: **16.09.2025**

*இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு **2025–ஆம் ஆண்டு செப்டம்பர் 03 ம்** நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

(ஒம்./– S.வேல்சூர்யா.,), (03.09.2025)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.